மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல, விக்கிரமங்கலத்திலிருந்து வாடிப்பட்டிக்கு நேரடியாக எந்தப் பேருந்தும் இல்லை. வாடிப்பட்டிக்கும் சோழவந்தானுக்கும் மிக அதிகமான பேருந்துகள் இருக்கின்றன. அப்படி வாடிப்பட்டியிலிருந்து சோழவந்தானுக்கு வருகின்ற பேருந்துகளை விக்கிரமங்கலத்திற்கோ, அய்யனார்குளத்திற்கோ நீட்டித்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விருப்பத்தின்பேரில் — இவ்வளவு வசதிகள் போதாது, நேரடியான வசதிகள்தான் வேண்டுமென்று சொல்வார்களேயானால், வலியுறுத்துவார்களேயானால், இதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 106, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

106—

பயணியர் விடுதி

***9682—திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் தொகுதியில் அயல்நாட்டுப் பறவைகள் அதிகமாக வந்து தங்கும் வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயத்தில் பயணியர் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயத்தில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2002 ஏப்ரல் 5]

திரு. கே. கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருக்கோடியிலே இருந்த எங்களைப் போன்றவர்களை கோட்டையிலே அமரவைத்து, அழகு பார்க்கின்ற இதய தெய்வம் அம்மா அவர்கள் திசை நோக்கி வணங்கி, திருப்பத்தூர் தொகுதி வேட்டங்குடிப்பட்டி சரணாலயத்தில், வனத் துறை பறவைகள் காப்பகப் பகுதியிலிருந்து பறவைகளைச் சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவதற்கு 20 அடி மற்றும் 15 அடி உயரத்திற்கு இரண்டு டவர்கள் மற்றும் 200 மீட்டர் தடுப்புச் சுவர்களும் கட்டப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியா, நைஜீரியா போன்ற வெளி நாடுகளிலிருந்து நாரை மற்றும் பல இனப் பறவைகள் ஜூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை வந்து தங்கியிருந்து குஞ்சுகளைப் பொறித்து, தங்கள் நாடுகளுக்கு அழைத்துச் செல்கின்றன. இந்தச் சரணாலயத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்வதற்கு 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு இடம் இல்லை. இதனை மறுபரிசீலனை செய்து, இத்துறையின் மூலம் பயணிகள் தங்கும் விடுதி கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேட்டங்குடிப்பட்டி பறவைகள் சரணாலயம், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து மதுரை சாலையில் பதினோராவது கிலோ மீட்டர் தூரத்தில் சாலைக்கு அருகில் அமைந்துள்ளது. சுமார் 38.40 எக்டேர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இந்தச் சரணாலயத்தில் பருவகாலங்களில் தாராளமான அளவில் உள்நாட்டுப் பறவைகள் மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வந்து தங்கி இனவிருத்தி செய்து செல்கின்றன. முக்கியமாக அரிவாள்மூக்கன், கரண்டிமூக்கு நாரை, செங்கால் நாரை, சாம்பல் நாரை, கூழைகடா, மணிப்புறா, மாடப்புறா போன்ற அரிய வகை பறவைகள் உட்பட சுமார் 37 வகையான பறவைகள் வந்து தங்கிச் செல்கின்றன. இந்தச் சரணாலயத்தின் அருகில் அமைந்த வேட்டங்குடிப்பட்டி, கொள்ளுகுடிபட்டி போன்ற சிறிய கிராமப் பகுதிகளில் பயணிகள் விடுதி கட்டினால், சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமான வசதிகள் கிடைக்கும் என்பது உண்மை. மேலும், மேற்படி கிராமப் பகுதிகள் சரணாலயத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளதால், இங்கு பயணிகளுக்கு விடுதி கட்டுவதன் மூலம், சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன் பறவைகளின் இயற்கையான நடமாட்டத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 5

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமாதேவன், பயணிகள் விடுதி கட்டினால் பயணிகள்தான் வருவார்களே தவிர, பறவைகள் வராது.

வினா எண் 107, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

107—

சென்ட் தொழிற்சாலை

***2337—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறு சந்திப்பில் சென்ட் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. வில்வநாதன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 10 மாதங்களுக்கு முன்னாலே, என்னைப் போன்றவர்களை இந்த அவையிலே அறிமுகப்படுத்தி, இன்று அமைச்சரவையிலே இடம் அளித்து உயர்த்தியிருக்கிற, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய சிரம் தாழ்ந்த வணக்கத்தினை அம்மாவின் பொற்பாதங்களிலே செலுத்தி, என்னுடைய கன்னி பதிலை அளிக்கிறேன்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், காவல் கிணறு சந்திப்பில் சென்ட் தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமான செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன், மறுபடியும் அமைக்கப்படுமா என்று எழுந்து கேளுங்கள்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னகத்திலே சென்ட் தொழிற்சாலை அமைப்பதன் மூலம் மணம் நிறைந்த பகுதியாக தென்னகத்தை மாற்ற வேண்டுமென்ற உங்களுடைய கோரிக்கையையும் ஏற்று, அங்கே சென்ட் தொழிற்சாலை